சங்க இலக்கியங்கள் காட்டும் கற்பொழுக்கம்

8

The Ideal of Chastity in Sangam Literature

சுந்தரமூர்த்தி.க, தமிழாய்வுத் துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி -05

Sundaramoorthy.G, Dept Of Tamil, Srimad Andavan Arts & Science College (Autonomous)Trichy – 05

DOI: 10.5281/zenodo.21736741

Abstract

Morality stands as an indispensable cornerstone of human existence, serving as the primary compass that guides individuals toward achieving the apex of personal and social excellence. The distinction between a person's ultimate elevation and decline is fundamentally rooted in their moral well-being and ethical character. An individual who harmoniously integrates goodwill, righteous virtue, noble deeds, and genuine benevolence inherently commands respect and functions as a pillar of strength within society.

Throughout the rich landscape of Tamil classical tradition, both Sangam literature and ethical/justice literature (Neethi Noolgal) consistently underscore the transformative power of human virtues. Virtues such as loving-kindness, deep affection, empathy, selflessness, and boundless mercy are portrayed not merely as ideal traits, but as essential qualities that elevate a person to a status admired by all.

Building upon this broader moral foundation, Sangam literature places a profound emphasis on specific virtues that govern interpersonal relationships and social order. Among these, the concept of chastity (Karpu) holds a paramount position within the Akam (interior/love) tradition. Consequently, the primary objective of this study is to examine how the virtue of chastity is conceptualized, portrayed, and revered across the thematic spectrum of Sangam literature

ஆய்வுச்சுருக்கம்

மனித வாழ்வின் இன்றியமையாததாக திகழ்வது ஒழுக்கமாகும். ஒருவனை வாழ்வின் எட்டா உயரத்திற்கு இட்டுச் செல்வது ஒழுக்கமே ஆகும். ஒருவன் தன் வாழ்வில் சிறப்புற்று விளங்குகிறான் என்றால் அதற்கு காரணியாக திகழ்வது ஒழுக்கம் எனலாம். மனிதன் தன் நிலையில் உயர்வதும் தாழ்வதும் அவன் கொண்டிருக்கின்ற ஒழுக்க நலனை பொறுத்தே அமையும். நல்லெண்ணம், நற்பண்பு, நற்செயல், நற்குணம் இவை அனைத்தும் ஒருங்கே பூண்டவன் இவ்வுலகை ஆண்டவனாக காட்சியளிப்பான். ஈகை, அன்பு, இரக்கம், கருணை, பாசம் எனப் பலப் பற்றுகளைப் பயின்றவன் பாரினால் போற்றப்படுவான் என்பதை சங்க இலக்கியக்களும் நீதி இலக்கியங்களும் எடுத்துரைத்து வருகிறது என்பதை உணரலாம்.

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப ஒழுக்கத்தை நாம் உயிரினும் மேலாக கருத வேண்டும். அவ்வகையில் சங்க இலக்கியங்களில் கற்பொழுக்கம் எங்ஙனம் திகழ்கிறது என்பதை நாம் அறியவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாக கருதப்படுகிறது.

KeyWords: ஒழுக்கம் , நற்பண்பு, நற்செயல், நற்குணம், களவு, கற்பு, *Discipline, good character, good deed, virtue, theft, chastity.*

முன்னுரை

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சங்க இலக்கியங்கள் தமிழரின் சமுதாயம் மற்றும் ஒழுக்க நெறிகளை வகுத்துள்ளன எனலாம். அத்தகைய சிறப்பு வாய்ந்த ஒழுக்கநெறிகள் உலகளாவிய பார்வைக்கு வித்திடுகின்றன என்றால் அவை மிகையில்லை எனலாம். சங்ககால மக்கள் தனிமனித சிந்தனைகளில் மேலோங்கி காணப்பட்டார்கள். ஈகை, இரக்கம், விருந்தோம்பல், போற்றும் குணம் என பல ஒழுகலாறுகளைத் தன்னுள் கொண்டிருந்தாலும் கற்பு என்னும் சிறந்த ஒழுக்கத்தைப் போற்றிப் பாதுகாத்தனர்.

கற்பொழுக்கம் என்பது பெண்ணுக்கு மட்டும்தான் உரியது என்று அல்லாமல் ஆணுக்கும் உரியது என்ற நியதி பழங்கால மக்களிடம் பரவலாக காணப்பட்டது. பழந்தமிழரின் இலக்கியங்கள் பல பாடல்களில் சாற்றுகின்றன எனலாம். கற்பு என்ற சொல்லுக்கு அகராதி பல பெயர்களில் பொருள் தருகிறது. சங்க இலக்கியங்கள் கற்பு என்பது ஒழுக்கம் என்ற பொருளை சுட்டுகிறது.

தொல்காப்பியர் அவர்கள்,

“கற்பெனப்படுவது கரணமொடு புணர
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடை குறி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே” **(தொல். பொருள்: களவு – நூ – 8)**

என்று எடுத்துரைக்கிறார்.

மகளிரின் நிலை

சங்க காலத்தில் மகளிர் சிறப்பு பெற்றுத் திகழ்ந்தனர். பெண்கள் கல்வி கற்கும் உரிமையும்கவிபாடும் திறமையையும் பெற்றிருந்தனர். இல்லறத்தின் தலைமைப் பொறுப்பினை பெண்களே ஏற்று இல்லறத்தை நல்லறத்துடன் வழி நடத்தினர். பெண் 'இல்லாள்' என்று அழைக்கும் பேறு பெற்றனர்.

பண்புகள்

பழந்தமிழ் பண்பாட்டின் முதன்மையாய் அமைந்தவை சங்க கால பெண்களின் பண்புகள். ஆடவரும் மகளிரும் இணைந்து மேற்கொள்கின்ற இல்லற வாழ்வு, முழுமையான வாழ்வு என்றும், முதன்மையான வாழ்வு என்றும் கூறப்படுகிறது. ஒரு நாட்டின் பண்பாடு உயர்வு தாழ்வு நிலைக்கு காரணமாக இருப்பதே பெண்களின் பண்புகள் என்பர்.

'அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப'
அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த

என்று அச்சம் நாணம் மடம் முதலிய பண்புகள் பெண்களுக்கு உரிய பண்புகளாகப் போற்றப்பட்டன. மகளிர் தன் மனத்தாலும் உடலாலும் அச்சம் கொண்டனர். பொருந்தாத செயல்களுக்கு விலகி நாணம் கொண்டனர். பெண்மையின் இலக்கணத்துடன் வாழ்ந்தனர்.

அறிந்தும் அறியாத தன்மையினராய் இருத்தலில் மடம் கொண்டனர். ஆனால் சங்க கால மகளிர் உயிரினும் சிறந்தது கற்பு என்று கற்பைப் போற்றிப் பாதுகாத்தனர்.

"கடவுள் கற்பு" **(அகநானூறு பா – 184)**

"நன்றி சான்ற கற்பு" **(நற்றிணை பா – 330)**

"வடமீன்புரையும்கற்பின் மடமொழி" **(புறநானூறு பா – 122)**

என்று பெண்களின் கற்பின் சிறப்பினையும் அவர்கள் கற்பிற்கு அளித்த மதிப்பினையும் இச்சான்றுகளால்காணமுடிகின்றது.

சங்ககால மகளிர் இல்லறத்தை வழிநடத்தி செல்லக்கூடிய ஆற்றலைக் கொண்டிருந்தனர். பெண்ணே குடும்பத்திற்கு குலவிளக்காகத் திகழ்கிறாள். அவளுடைய பெரும் பண்புகளே வாழ்க்கைக்கு சிறப்பாய் திகழ்ந்துள்ளது எனலாம்.

"அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பு நிகழ் கும் கிழவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கையொடு" **(அகநானூறு பா – 225: 1 – 3)**

என்பது இல்லறத் தலைவியாகிய பெண் அன்பு, ஒழுக்கம், கற்பு, பொறை, விருந்தோம்பல், சுற்றத்தாரை ஓம்பல் முதலிய பண்புநலன்களை பெற்றுத் திகழ்ந்தார் என்பதைக் குறிப்பிடுகின்றது. மேற்கூறிய கருத்துக்குச்சான்றாக,

முல்லை சான்ற கற்பு

மகளிரின் கற்புக்கு முல்லை மலரினை ஒப்பாக கூறுவர். மகளிர் கற்புடையவராகத் திகழ்வதற்கு அறிகுறியாக முல்லை மலரைச் சூட்டிக் கொள்கின்றனர் என்பதை நாம் அறியமுடிகின்றது..

"முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்" **(அகநானூறு பா – 274: 13 – 14)**

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது

கற்புடைய பெண்ணை அக்கால மக்கள் தெய்வமாகப் போற்றினர் சிலப்பதிகாரத்தில் குன்றக்குரவையில் சேர நாட்டு மக்கள் குரவை ஆடி கண்ணகி வந்து இருந்த வேங்கை மரத்தின் அடியில் அவளை குலதெய்வமாகப் போற்றியது நாம் அறிந்ததாகும். இத்தகைய தன்மையின் மூலம் பெண்ணின் உயர்வையும் கற்பின் சிறப்பையும் அறியமுடிகிறது. இதனை,

"ஆன்ற கற்பின் சான்ற பெரியள்
அம்மா அரிவையோ அல்லள்
……
ஏர் மலர் நிறை சுனை உறையும்
சூர் மகள் மாதோ என்னும்" **(அகநானூறு பா – 198: 12 – 13, 16 – 17)**

என்பது சிறந்த கற்பனை உடைய உயர்ந்த பெருமையுடைய அழகிய மாமை நிறமுடைய பெண் அல்ல அவள். மலைப் பக்கத்தில் மெல்லிய மலர்களை உடைய சுனையில் உறையில் சூரரமகளிர் அவள் என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு, கற்புடைய பெண்ணை தெய்வமாகக் கருதினர்

என்பதை உணரமுடிகின்றது. இக்கருத்துக்கு சான்றாக,

"பெண்மை சான்று பெறும் இடம் நிலைஇக்
கற்பு இறை கொண்ட கமழும் சுடர் நுதல்
புரையேள்……..." **(பதிற்றுப்பத்து பா:14 – 16)**

என்ற பதிற்றுப்பத்து அடிகள் கற்புடைய மகளிரைத் தெய்வமாக கொண்டு போற்றினர் என்பதைக் குறிப்பிடுகின்றது.

"தொன்மைக்காலம் தொட்டு தமிழ்ச் சமுதாயம் மகளிருக்கு பெரிதும் மதிப்புத் தந்து வந்துள்ளது. ஆடவரும் பெண்டிரும் சம உரிமை இருந்தது என்றும், சமுதாய கடமைகளில் கணவனும் மனைவியும் சம உரிமை பெற்றிருந்தனர் என்றும், இவ்வுண்மை ரிக் வேதத்தின் ஐந்தாம் நூலில் 61 ஆம் சுலோக பகுதியை எட்டாவது ஸ்லோகத்தில் திண்மையாக விளக்கப்பட்டுள்ளது" (புறநானூற்றில் தமிழர் பண்பாடு பக் – 65) என்று பேராசிரியர் இந்திராஎன்பவர் கருத்து குறிப்பிடத்தக்கதாகும்.

சங்க காலத்தில் மகளிர் நிலை போற்றும்நிலையாகவே இருந்துள்ளது ஒத்த வயதுடைய தலைவனும் தலைவியும் எதிர்பாராத விதமாக சந்திக்கப் படுகின்றனர். பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் காதலித்து திருமணம் செய்து கொள்கின்றனர். மகளிர் தான் விரும்பும் கணவனையையே கணவனாக தேர்ந்தெடுக்கும் உரிமையை அக்காலத்தில் பெற்றிருந்தனர்.

தலைவனும் தலைவியும் அன்போடு புணர்ந்த ஐவகை நிலங்கள் ஆகிய குறிஞ்சி முல்லை நெய்தல் பாலை மருதம் ஆகியவை ஆகும். ஐந்திணை இடத்திலும் காமக் கூட்டம் நிகழும் என்பதனை,

"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்" **(தொல் பொருள் களவு : நூ – 1)**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

சங்ககால மகளிர் இல்லறத்தைப் பேணுகின்ற ஆளுமையைப் பெற்றுத் திகழ்ந்தனர். கணவனை தன் உயிராக போற்றி கருதினர். தன் உயிரைக் காட்டிலும் சிறந்ததாக நாணத்தைப் போற்றினர். ஆனால் நாணத்தை காட்டிலும் மிக சிறந்ததாக கற்பினைப் போற்றிப் பாதுகாத்து வந்தார்கள் என்பதனை,

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" **(தொல் பொருள் - களவு : நூ -22)**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதை காணலாம்.

இவ்வாறு மேற்குறித்த குணங்களோடு தலைவனுக்கு ஏற்ற வாழ்க்கை துணையாக பெண் திகழ்ந்தாள் அப்பெரும்குணங்களாக,

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல்பொறையும்நிறையும்வல்லிதின்
விருந்து புறந்தருதல் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்" **(தொல். பொருள் :கற்பு-நூ – 11)**

என்று தொல்காப்பியர் பெண்மையின் குணங்களையும் அவற்றில் அவள் மதிக்கின்ற பெரிதும் போற்றுகின்ற கற்பெழுக்கத்தின் பெருமைகளையும் எடுத்துரைக்கிறார்.

ஒரு சமூகம் மேம்பட வேண்டுமென்றால் அந்நாட்டின் மக்கள் மேம்படவேண்டும் அம்மக்கள் மேம்பட வேண்டுமென்றால் அவர்களிடத்து நற்குணங்களைக் கொண்ட ஒழுகலாறுகள் மேம்பட வேண்டும். அத்தகைய சிறப்புமிக்க கற்பொழுக்கத்தினை நம் முன்னோர்கள் பெரிதாகவும் உயிராகவும் மதித்து போற்றி வாழ்ந்தனர் என்பதை பழந்தமிழர்களின் இலக்கியங்கள் வாயிலாகப் பெரிதும் உணர முடிகிறது என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமிதம் கொள்வோம்.

துணைநூற்பட்டியல்

1. தொல்காப்பியம் – பொருளதிகாரம் ,கழக வெளியீடு , சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் , திருநெல்வேலி.

2. சங்க இலக்கியங்கள் – ச.வே.சுப்ரமணியன் , சாரதா பதிப்பகம் ,சென்னை.

3. புறநானூற்றில் தமிழர் பண்பாடு மு. அருணாச்சலம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

References

1. *Tolkappiyam – Porulatikaram, Kazhagam Publication, Saiva Siddhanta Publishing Society, Tirunelveli.*

2. *Sangam Literature,S. V. Subramanian, Saradha Publications, Chennai.*

3. *Tamil Culture in Purananuru, Mu. Arunachalam, New Century Book House.*

Cite this Article in English

Sundaramoorthy.G "**The Ideal of Chastity in Sangam Literature**" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 2, July 2026, pp. 49-53*